Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், ஏப்ரல் 17, 2025 | இதழ் 4

# அமராவதி விமான நிலையம் திறக்கப்பட்டதற்கு பிரதமர் பாராட்டு

சென்னை, 17 ஏப்ரல் 2025: அமராவதி விமான நிலையம் திறக்கப்பட்டது, மகாராஷ்டிராவுக்கு, குறிப்பாக விதர்பா பகுதிக்கு ஒரு நல்ல செய்தி என்று பாராட்டிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, அமராவதியில் செயல்படும் விமான நிலையம், வர்த்தகம் மற்றும் இணைப்பை மேம்படுத்தும் என்று குறிப்பிட்டார்.

மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு கிஞ்சரப்பு, சமூக ஊடக எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவுக்கு பதிலளித்து திரு மோடி கூறியதாவது:

"மகாராஷ்டிராவுக்கு, குறிப்பாக விதர்பா பிராந்தியத்திற்கு இது ஒரு நற்செய்தி. அமராவதியில் செயல்படும் விமான நிலையம் வர்த்தகம் மற்றும் இணைப்பை மேம்படுத்தும்."

# பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் ஃபின்லாந்து குடியரசு அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப் தொலைபேசி வாயிலாக உரையாடினார்

சென்னை, 17 ஏப்ரல் 2025: பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் ஃபின்லாந்து குடியரசு அதிபர் திரு. அலெக்சாண்டர் ஸ்டப் தொலைபேசி வாயிலாக இன்று உரையாடினார்.

தற்போது நடைபெற்று வரும் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் ஆய்வு செய்ததுடன், உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்கள். பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சனைகள் குறித்த கருத்துக்களை அவர்கள் பரிமாறிக் கொண்டனர்.

மின்னணுமயமாக்கல், நிலைத்தன்மை, போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே நடைபெற்று வரும் ஒத்துழைப்பு குறித்து தலைவர்கள் ஆய்வு செய்தனர். குவாண்டம், 5ஜி-6ஜி, செயற்கை நுண்ணறிவு மற்றும் சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தவும், அவர்கள் உறுதி பூண்டனர்.

உக்ரைன் நிலவரம் உள்ளிட்ட பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்தும் தலைவர்கள் தங்களது கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இந்தியா-ஐரோப்பிய யூனியன் உறவுகள் மற்றும் பரஸ்பரம் பயனளிக்கும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை விரைவில் நிறைவு செய்தல் ஆகியவற்றுக்கான ஃபின்லாந்து ஆதரவை ஃபின்லாந்து அதிபர் ஸ்டப் தெரிவித்தார். இரு தலைவர்களும் தொடர்ந்து தொடர்பில் இருக்க ஒப்புக் கொண்டனர்.

# 2024-25-ம் நிதியாண்டில் அரசு மின்னணு சந்தை மூலம் 1.3 கோடிக்கும் அதிகமான நபர்கள் காப்பீடு செய்துள்ளனர்

சென்னை, 17 ஏப்ரல் 2025: பொது கொள்முதலுக்கான இந்தியாவின் மிகப்பெரிய மின்னணு சந்தையான அரசு மின்னணு சந்தை(ஜெம் )24-25-ம் நிதியாண்டில் சேவை வழங்கலில் மற்றொரு மைல்கல்லை எட்டியுள்ளது. 24-25-ம் நிதியாண்டில் 10 லட்சம் மனித வளங்களை பணியமர்த்துவதற்கு வழிவகை செய்ததோடு தவிர, அரசு மின்னணு சந்தை 1.3 கோடிக்கும் அதிகமான தனிநபர்களுக்கு சுகாதாரம், ஆயுள் மற்றும் தனிநபர் விபத்து காப்பீட்டை வெற்றிகரமாக எளிதாக்கியுள்ளது.

அதிக செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் சிக்கனமான செலவு ஆகியவற்றை காப்பீட்டு பாலிசி எடுக்கும்போது உறுதி செய்வதற்காக காப்பீட்டு சேவைகள் என்ற வகைப்பாடு ஜனவரி 2022-ல் அரசு மின்னணு சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஞாப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்கள் மட்டுமே ஜெம் போர்ட்டலில் உள்நுழைய முடியும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. காப்பீட்டு சேவைகளைப் பெறுவதற்கு அரசு மின்னணு சந்தை நம்பகமான நடைமுறையை உருவாக்கியுள்ளது. இந்த தளத்தின் மூலம், காப்பீடுகளை வாங்குகின்ற நிறுவனங்கள் குழு சுகாதார காப்பீடு, தனிநபர் விபத்து மற்றும் காலமுறை காப்பீடுகளை தடையின்றி வாங்கலாம். இதன் மூலம் ஏராளமான பயனாளிகளுக்கு அந்நிறுவனங்கள் நிதி பாதுகாப்பை வழங்கலாம்.

இது குறித்து கருத்து தெரிவித்த அரசு மின்னணு சந்தையின் தலைமைச் செயல் அதிகாரி திரு அஜய் படூ, "தடையற்ற, பாதுகாப்பான மற்றும் செலவு குறைந்த கொள்முதல் தீர்வுகளை வழங்குவதற்கான தனது தளத்தை தொடர்ந்து மேம்படுத்த அரசு மின்னணு சந்தை உறுதிபூண்டுள்ளது. 1.3 கோடி காப்பீடு பெற்ற நபர்கள் என்ற மைல்கல், அவர்களின் காப்பீட்டுத் தேவைகளுக்கு அரசு மின்னணு சந்தையை பயன்படுத்துவதில் அரசு அமைப்புகளின் வளர்ந்து வரும் நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது. மேலும் பொது கொள்முதலில் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக அதன் பங்கை மீண்டும் உறுதிப்படுத்துகிறது என்று தெரிவித்தார்.

அரசு மின்னணு சந்தையின் காப்பீட்டு சேவைகளின் ஒரு முக்கிய நன்மை என்னவென்றால், இது அரசு சார்பில் பாலிசி வாங்குபவர்களுக்கும் காப்பீட்டு வழங்குநர்களுக்கும் இடையே இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடி பரிவர்த்தனைகளை எளிதாக்குகிறது.

இந்த நெறிப்படுத்தப்பட்ட அணுகுமுறை செயல்முறையை கணிசமாக விரைவுபடுத்தியுள்ளது. அதே நேரத்தில் காப்பீட்டு பிரீமியத் தொகையையும் குறைத்துள்ளது. இதனால் அரசு நிறுவனங்களுக்கு செலவு சேமிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆயுள் மற்றும் சுகாதார காப்பீட்டிற்கு அப்பால், சொத்து காப்பீடு, போக்குவரத்து மற்றும் கடல் காப்பீடு, பொறுப்பு காப்பீடு, கால்நடை காப்பீடு, மோட்டார் காப்பீடு, பயிர் காப்பீடு மற்றும் சைபர் காப்பீடு போன்ற விரிவான காப்பீட்டுச் சேவைகளை உள்ளடக்கிய தனது காப்பீட்டு சேவைகளை இந்த தளம் விரிவுபடுத்தியுள்ளது.




# சாகித்ய அகாடமி ஏற்பாடு செய்த ‘தலித் சேத்னா‘ நிகழ்ச்சி

சென்னை, 17 ஏப்ரல் 2025: டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கரின் பிறந்த நாளை முன்னிட்டு சாகித்ய அகாடமி ஏற்பாடு செய்திருந்த 'தலித் சேத்னா' நிகழ்ச்சியில் ஆறு புகழ்பெற்ற எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளை வழங்கினர். மகேந்திர சிங் பெனிவால், மம்தா ஜெயந்த், நாமதேவர், நீலம் ஆகியோர் தங்களது கவிதைகளை வாசித்தனர். பூரன் சிங், தேக்சந்த் ஆகியோர் சிறுகதைகளை வாசித்தனர். அவர்களது படைப்புகளில் டாக்டர் அம்பேத்கரின் அடிப்படை போதனைகள் மற்றும் அவரது தொலைநோக்குப் பார்வைகள் ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையில் அமைந்திருந்தன. இது போன்ற நடவடிக்கைகள் பாகுபாடில்லாத சமுதாயத்தை உருவாக்க உதவும். முதலாவதாக, மம்தா ஜெயந்த் தனது ஐந்து கவிதைகளை "சபி நே சுவா தா", "ஜீவ் இமரத்தேன்", "ஈஸ்வர்", "நஹி சாஹியே" மற்றும் "பஹேலியன் கே நாம்" ஆகிய தலைப்புகளில் வாசித்தார். டாக்டர் அம்பேத்கரின் கனவுகள் தற்போதைய நிலையை பிரதிபலிக்கும் வகையில் "பாபா பீம்", "காடிவான்", "குவான்" மற்றும் "பெஹச்சான்" என்ற தலைப்புகளில் நாம்தேவ் தனது கவிதைகளை வாசித்தார். நீலத்தின் கவிதைகளின் "சப்சே புரி லட்கி", "நயி துனியா கே ரச்சாய்தா", "தும்ஹாரி உமீதோன் பே கரே உத்ரெங்கே ஹம்" மற்றும் "உத்தோ சங்கர்ஷ் கரோ" ஆகிய தலைப்புகளில் இடம் பெற்றிருந்தன. "சப்சே புரி லட்கி" என்ற கவிதை பெண்களின் உரிமைகள், சமத்துவத்திற்கான போராட்டத்திற்கு உத்வேகம் அளிப்பதாக இருந்தது. மகேந்திர சிங் பெனிவால் "தஸ்வீர்", "அவுர் கப் தக் மரே ஜாகே", "பேடியா" மற்றும் "ஆக்" என்ற கவிதைகளை வாசித்தார். அவை நவீன சமூகத்தின் இரட்டை மனநிலையை மிகவும் துல்லியமாக வெளிப்படுத்தின. தேக்சந்த் வழங்கிய கதைக்கு "குபார்" என்று பெயரிடப்பட்டது. இதில் தலித்துகள் உட்பட சில சமூகங்களிடையே நிலவி வரும் அறியாமையின் வேர்கள் எளிய முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. பூரன் சிங் தனது "ஹவா கா ருக்" கதையை வாசித்தார். இது பல்வேறு அழுத்தங்களின் விளைவாக ஒரு எழுத்தாளர் சமரசம் செய்து கொள்ள வேண்டிய முரண்பாடான சூழலை மையமாகக் கொண்டிருந்தது. இந்நிகழ்ச்சியை இந்தி ஆசிரியர் திரு அனுபம் திவாரி தொகுத்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஏராளமான எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# இந்திய விமானப்படை மார்ஷல், பத்மவிபூஷண் அர்ஜன் சிங் பிறந்த நாள் கொண்டாட்டங்கள்

சென்னை 17, ஏப்ரல் 2025 : 2025 ஏப்ரல் 15-ம் தேதி, இந்திய விமானப்படையின் மார்ஷல் பத்மவிபூஷண் அர்ஜன் சிங்கின் 106-வது பிறந்த தினத்தை நினைவுகூரும் வகையில், தில்லி துக்ளகாபாத்தின் அஸ்தாவில் உள்ள மூத்த குடிமக்கள் இல்லத்தில் அவரது மார்பளவு சிலை திறந்து வைக்கப்பட்டது.

பராமரிப்பு பிரிவு விமானப்படை தலைமை அதிகாரி மார்ஷல் விஜய் குமார் கார்க் மற்றும் விமானப்படை முன்னாள் மார்ஷல் ஜக்ஜீத் சிங் (ஓய்வு), மூத்த துணைத்தலைவர் விமானப்படை சங்கம் ஆகியோர் சிலையைத் திறந்து வைத்தனர்

இந்த நிகழ்ச்சியில் திருமதி ரிது கார்க், துக்ளக்பாத் விமானப்படை வீரர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் மார்ஷல் அர்ஜன் சிங்கின் உருவச் சிலைக்கு அஞ்சலி செலுத்தப் பட்டது. இந்த சிலையானது அவரது துணிச்சல், தொலை நோக்குப் பார்வையுடன் கூடிய தலைமைப் பண்பு நாட்டிற்காக அவர் ஆற்றிய தன்னலமற்ற சேவையை அடையாளப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

1965-ம் ஆண்டு நடைபெற்ற போரின் போது, விமானப் படை வீரர்களுக்கு அவர் தலைமைப் பொறுப்பு ஏற்றிருந்தார். அவரது உத்திசார் நடவடிக்கைகள் மற்றும் உறுதியான முடிவுகள் குறித்தும் பார்வையாளர்களுக்கு விவரிக்கப்பட்டது. அவரது சீரிய தலைமையின் கீழ், அக்னூர் பகுதியில் பாகிஸ்தானின் கவச வாகனத்தை இந்திய விமானப்படையின் உறுதியான வான்வழி தாக்குதல் தகர்த்தது. இதன் காரணமாக இந்தப் போரின் வெற்றி இந்தியாவுக்கு சாதகமாக அமைந்தது.

# நாட்டின் சில்லறை பணவீக்கம் 6 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சரிவு



சென்னை 17, ஏப்ரல் 2025 : இந்தியாவில் சில்லறை பணவீக்கம், நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணால் அளவிடப்படுகிறது, இது அன்றாட பொருட்கள், சேவைகளின் விலையை பிரதிபலிக்கிறது. இது 2024-25 நிதியாண்டில் குறிப்பிடத்தக்க அளவில் 4.6% ஆக சரிந்தது. இது 2018-19-க்குப் பிறகு மிகக் குறைவானதாகும்.

நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையிலான சில்லறை விலை பணவீக்கம், கடந்த மார்ச் மாதத்தில் 3.34 சதவீதமாகக் குறைந்துள்ளது.

கடந்த 2019 ஆகஸ்ட்டுக்கு பின் அதாவது, 67 மாதங்களில் அதாவது சுமார் 6 ஆண்டுகளில் இதுவே குறைந்தபட்ச பணவீக்கம் ஆகும்.

காய்கறிகள், முட்டை, பருப்பு வகைகள், இறைச்சி உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை குறைந்ததே பணவீக்கம் குறைய முக்கிய காரணமாக அமைந்தது. கடந்த பிப்ரவரியில் 3.75 சதவீதமாக இருந்த உணவுப் பொருட்கள் பணவீக்கம், மார்ச் மாதத்தின் 2.69 சதவீதமாக குறைந்துள்ளது.

கடந்தாண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டு மார்ச் மாதத்தில், இஞ்சி, தக்காளி, பூண்டு போன்றவற்றின் விலை கணிசமாக குறைந்துள்ளது.

இதனிடையே கடந்த மாதம், நகர்ப்புறங்களில் பணவீக்கம் 3.43 சதவீதமாகவும்; கிராமப்புறங்களில் 3.25 சதவீதமாகவும் இருந்தது.

சமீபத்திய ஆண்டுகளில் சில்லறை பணவீக்கத்தின் நிலையான வீழ்ச்சி இந்தியாவின் பொருளாதார பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லைக் குறிக்கிறது.

இது மத்திய அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகளின் வெற்றியை பிரதிபலிக்கிறது.

ஆக்கபூர்வமான நிதிக் கொள்கைகள் முதல் நுகர்வோரை பாதுகாக்கும் முக்கியமான நிதி நடவடிக்கைகள் பின்பற்றப்படுவது வரை, அரசின் அணுகுமுறை அனைவரையும் உள்ளடக்கியதாகவும், பயனுள்ளதாகவும் உள்ளது.

2018-19 ஆம் ஆண்டிலிருந்து பணவீக்கம் இப்போது மிகக் குறைவாக உள்ள நிலையில், இந்தியா பேரியல் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தியிருப்பது மட்டுமல்லாமல், நிலையான வளர்ச்சிக்கு உகந்த சூழலையும் உருவாக்கியுள்ளது. 'ளர்ச்சி இலக்குகளில் சமரசம் செய்யாமல் விலை நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கான அரசின் அர்ப்பணிப்பை இது எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வியாழன்,
ஏப்ரல் 17, 2025

# கைதான் & கோ, மேக்மைட்ரிப் மற்றும் ஷார்துல் அமர்சந்த் மங்கல்தாஸ் ஆகியவை லிங்க்ட்இனின் 2025 சிறந்த நடுத்தர நிறுவனங்கள் இந்தியாவின் பட்டியலில் முதல் 3 இடங்களைப் பிடித்தன.

சென்னை 17, ஏப்ரல் 2025: உலகின் மிகப்பெரிய தொழில்முறை வலையமைப்பான லிங்க்ட்இன், இன்று இந்தியாவிற்கான 2025 சிறந்த நடுத்தர நிறுவனங்களின் பட்டியலை வெளியிட்டது, இதில் உலகளவில் 5,000 க்கும் குறைவான ஊழியர்களைக் கொண்ட 15 நிறுவனங்களும், இந்தியாவில் குறைந்தது 250 ஊழியர்களும் உள்ளனர், அங்கு வல்லுநர்கள் தங்கள் வாழ்க்கையை உருவாக்கி வளர்க்க முடியும். தளத்தில் மில்லியன் கணக்கான நிபுணர்களின் செயல்பாட்டின் அடிப்படையில், பட்டியல் தேவைக்கேற்ப திறன்கள், சிறந்த இடங்கள் மற்றும் இந்த நிறுவனங்களுக்குள் உள்ள மிகப்பெரிய வேலை செயல்பாடுகள் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது, இது வேலை தேடுபவர்கள் தங்கள் அடுத்த வாய்ப்பைக் கண்டறிய உதவுகிறது.

முன்னேறும் திறன், திறன் வளர்ச்சி, வெளிப்புற வாய்ப்பு மற்றும் நிறுவன உறவு உள்ளிட்ட எட்டு தூண்களைக் கொண்ட லிங்க்ட்இன் தரவுகளிலிருந்து பெறப்பட்ட இந்தப் பட்டியல், போட்டி நிறைந்த வேலைச் சந்தையில் திறமையில் முதலீடு செய்து தீவிரமாக பணியமர்த்தும் நிறுவனங்களை எடுத்துக்காட்டுகிறது.

இந்த ஆண்டு பட்டியலில் கைதான் & கோ (#1) முன்னணியில் உள்ளது, அதைத் தொடர்ந்து மேக்மைட்ரிப் (#2) மற்றும் ஷார்துல் அமர்சந்த் மங்கல்தாஸ் & கோ (#3) ஆகியவை இந்தியா முழுவதும் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதில் சட்டம் மற்றும் பயணத் துறைகளின் வலிமையைப் பிரதிபலிக்கின்றன. அரசியலமைப்புச் சட்டம், பயண மேலாண்மை மற்றும் வருவாய் பகுப்பாய்வு போன்ற திறன்களுக்கான வலுவான தேவையுடன், வழக்கறிஞர், சட்ட கூட்டாளி, கணக்கு மேலாளர் மற்றும் வணிக மேம்பாட்டு மேலாளர் போன்ற பதவிகளுக்கு அவர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள். பெரும்பாலான பணியமர்த்தல் மும்பை, குருகிராம் மற்றும் டெல்லி-என்சிஆர் ஆகிய இடங்களில் குவிந்துள்ளது.

"இந்த ஆண்டு பட்டியல், குழுக்கள் குறைவாக உள்ள, நேரடிப் பணிப் பொறுப்புகளைக் கொண்ட, நேரடி வணிக தாக்கத்தை உருவாக்கும் வாய்ப்புகள் ஏராளமாக உள்ள நிறுவனங்களின் வளர்ச்சி வாய்ப்புகளை எடுத்துக்காட்டுகிறது" என்று லிங்க்ட்இன் தொழில் நிபுணரும் இந்தியாவின் மூத்த நிர்வாக ஆசிரியருமான நிரஜிதா பானர்ஜி கூறினார். 15 நிறுவனங்களில் பதினான்கு நிறுவனங்களின் தலைமையகம் மும்பை, டெல்லி-என்சிஆர், பெங்களூரு மற்றும் ஹைதராபாத்தில் உள்ளது. மும்பை மற்றும் டெல்லி-என்சிஆர் இல் உள்ள சட்ட நிறுவனங்கள் சட்டத் திறமையாளர்களை தீவிரமாக பணியமர்த்துகின்றன, பெங்களூரு மென்பொருள் சோதனை மற்றும் ஏஐ பயன்பாட்டுப் பணிகளுக்கு பணியமர்த்துகிறது, மேலும் ஹைதராபாத் மருந்து, குறைக் கடத்திகள் மற்றும் ஊடக செயல்பாடுகளில் தேவையை அதிகரித்து வருகிறது. இந்தத் துறைகளில் பரந்த அளவிலான டொமைன் அறிவு, தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் வலுவான தகவல் தொடர்பு மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்களைக் கொண்ட வல்லுநர்கள் இந்த நடுத்தர நிறுவனங்களில் ஒன்றில் வேலை பெறுவதில் சிறந்து விளங்குவார்கள்."

மருந்து கண்டுபிடிப்பு, சுகாதார தொழில் நுட்பம் மற்றும் நுகர்வோர் சில்லறை விற்பனை போன்ற துறை சார்ந்த துறைகளில் நடுத்தர நிறுவனங்கள் தொழில் வாய்ப்புகளை வழங்குகின்றன என்பதை இந்தப் பட்டியல் காட்டுகிறது. அரகென் லைஃப் சயின்சஸ் (#4) (#4) மரபணு பொறியியல் மற்றும் மருந்து உற்பத்தி திறன்களைக் கொண்ட நிபுணர்களை பணியமர்த்துகிறது, அதே நேரத்தில் டிரைகாக் ஹெல்த் (#7) பயோமெடிக்கல் இன்ஜினியரிங்

மற்றும் பொது சுகாதாரத்தில் நிபுணத்துவம் தேவைப்படும் பாத்திரங்களில் கவனம் செலுத்துகிறது. நைகா (#5) சில்லறை விற்பனை, அழகு சாதனவியல் மற்றும் கருத்தியல் கலை ஆகியவற்றில் வாய்ப்புகளை உருவாக்குகிறது, அழகு ஆலோசகர், பிராண்ட் மேலாளர் மற்றும் கடை மேலாளர் உள்ளிட்ட பாத்திரங்களுடன். லிங்க்ட் இன் பட்டியலின்படி, சாஸ்கென் டெக்னாலஜிஸ் (#9) மற்றும் மோஸ்ச்சிப் 2#13) போன்ற நிறுவனங்கள் பொறியியல் மற்றும் வடிவமைப்பில் தொழில் வாழ்க்கையை உருவாக்க உதவுகின்றன. சிக்னல் செயலாக்கம், மின்னணு கட்டுப்பாட்டு அமைப்புகள் மற்றும் மொபைல் பயன்பாட்டு மேம்பாடு ஆகியவற்றில் திறன்களுக்கான தேவை அதிகரித்து வருவதால், அவர்கள் வடிவமைப்பு பொறியாளர்கள், உட்பொதிக்கப்பட்ட மென்பொருள் பொறியாளர்கள் மற்றும் அமைப்பு பொறியாளர்களை பணியமர்த்துகின்றனர்.

இந்தப் பட்டியலில் உள்ள மற்ற நிறுவனங்கள் மக்கள் தொடர்பு, கல்வி தொழில்நுட்பம், இலாப நோக்கற்ற சேவைகள் மற்றும் வீட்டு சேவைகளில் பணிபுரிபவை. அட்பாக்டர்ஸ் பிஆர் (#8), பிரதான் (#10), எக்செல்சாப்ட் டெக்னாலஜிஸ் (#11), மற்றும் அர்பன் கம்பெனி (#12) ஆகியவை கணக்கு நிர்வாகி, மென்பொருள் பொறியாளர், மேம்பாட்டு நிபுணர் மற்றும் வணிக மேம்பாட்டு கூட்டாளி போன்ற பதவிகளுக்கு பணியமர்த்தப்படுகின்றன. இந்த நிறுவனங்கள் கார்ப்பரேட் கம்யூனிகேஷன்ஸ், ஆக்டிவ் லேர்னிங், பப்ளிக் பாலிசி மற்றும் காஸ்மெட்டாலஜி திறன்களைக் கொண்ட திறமையாளர்களை பணியமர்த்துகின்றன.

# சாம்சங் இந்தியாவானது ஏஐ-ஆற்றல் பெற்ற ரிமோட் டயக்னாஸ்டிக் மற்றும் டிரபுள்ஷூட்டிங் கருவி மூலம் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்தியுள்ளது



கோயம்புத்தூர் 17, ஏப்ரல் 2025: இந்தியாவின் மிகப்பெரிய கன்ஸ்யூமர் எலெக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங் ஆனது தனது ஹோம் அப்ளையன்சஸ் ரிமோட் மேனேஜ்மெண்ட் (ஹெச்ஆர்எம்) கருவியை அறிமுகப்படுத்தியுள்ளது. இது குறிப்பிடத்தக்க அளவில் காத்திருப்பு நேரங்களை குறைத்து வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துகின்ற அடுத்த-தலைமுறைக்கான, ரிமோட் சிக்கல் கண்டறியும் மற்றும் தீர்க்கும் தீர்வு ஆகும்.

ஏஐ-ஆற்றல் பெற்ற ரிமோட் டயக்னாஸ்டிக் மற்றும் டிரபுள் ஷூட்டிங்கின் ஆற்றலை பேணுவதன் மூலம் சாம்சங் தொழில்நுட்பவியலாளர்கள் (டெக்னிஷியன்) இப்போது பிரச்சினைகளை விரைவாக தீர்க்க முடியும் மற்றும் சிக்கலான வீட்டு வருகைகளுக்கான தேவையை குறைக்க முடியும். இந்த ஆக்கப்புத்தாக்க தொழில்நுட்பமானது விரைவு தீர்வுகள் மற்றும் குறைந்த பழுது நேரம் மூலம் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவது மட்டுமல்லாது தொழில்துறையில் ஒரு புதிய செந்தரத்தை அமைக்கிறது மற்றும் வாடிக்கையாளர் சேவையின் எதிர்காலத்தை மறுவரையறை செய்கிறது மற்றும் நுகர்வோர்கள் மற்றும் அவர்களது ஸ்மார்ட் ஹோம் சாதனங்கள் இடையேயான உறவை மறுகற்பனை செய்கிறது.

"சாம்சங் சேவையானது வீட்டு சாதன பழுது கண்டறிதலில் முன்னனியில் உள்ளது மற்றும் பிரச்சினைகளை நுண்ணியம் வழுவாத வகையில் கண்டறிய மேம்பட்ட கருவிகளை பயன்படுத்துகிறது. இதன் ஸ்மார்ட் டயக்னாஸ்டிக்ஸ் சேவை மூலம் வாடிக்கையாளர்கள் முன்கணிப்பு தீர்வுகளை பிரச்சினைகளை ரிமோட்டாக கண்டறிந்து தீர்க்கப்படுவதன் மூலம் பெறலாம். இதனால் டெக்னிஷியன் வருகைக்கான தேவை குறைகிறது. இந்த திருப்புமுனை தொழில்நுட்பமானது குறிப்பிடத்தக்க வகையில் காத்திருப்பு நேரங்களை குறைக்கிறது, விரைவான தீர்வுகளை உறுதிபடுத்துகிறது மற்றும் ப்ராடக்ட் பராமரிப்பு பற்றி உரிய கால விவரங்களை வழங்கி உச்சக்கட்டமாக வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துகிறது," என்று சாம்சங்கின் வாடிக்கையாளர் திருப்தி பிரிவின் விபி ஆன சுனில் கியூடின்ஹா விளக்கினார்.

ஹெச்ஆர்எம் ஆனது ரிமோட் ஆலோசனை, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களுடன் ஸ்மார்ட்திங்க்ஸ் செயலியில் பதிவுபெற்ற சாம்சங் ஸ்மார்ட் சாதனங்களுக்கு நிகழ்நேர தீர்வை செயல்படுத்துகிறது.

ஸ்மார்ட்திங்க்ஸ் என்பது வாடிக்கையாளர்-நோக்கு செயலியாகும் மற்றும் இது சாதன இயக்கு கருவியாக செயல்படுகிறது மற்றும் பயன்பாட்டு போக்குகளின் தரவை சேமிக்கிறது. இந்த ஆக்கப்புத்தாக்கத்தின் மூலம் சாம்சங், ஸ்மார்ட் சாதன நிர்வாகத்தில் தொடர்ந்து முன்னனி வகிக்கிறது மற்றும் உலகம் முழுதுமுள்ள வாடிக்கையாளர்களுக்கு வீட்டு சாதனத்தின் பராமரிப்பை அதிக திறனுள்ளதாகவும் தொந்தரவற்றதாகவும் ஆக்குகிறது. ஒரு வாடிக்கையாளர் தனது வீட்டு சாதனம் தொடர்பான பிரச்சினையுடன் சாம்சங்கின் ஆதரவு குழுவை தொடர்பு கொண்டால் ஹெச்ஆர்எம் அமைப்பானது பதிவு செய்த கருவியின் மாடல் மற்றும் சீரியல் நம்பரை தானாகவே சாம்சங்கின் சிஆர்எம் (கஸ்டமர் ரிலேஷன்ஷிப் மேனேஜ்மென்ட் சிஸ்டம்) மூலம் கண்டறிகிறது.

செயல்படுத்தப்பட்டவுடன் தொடர்பு மைய ஆலோசகர்கள் ரிமோட்டாக வாடிக்கையாளர் ஒப்புதலுடன் பழுது கண்டறியலாம், கண்காணிக்கலாம் மற்றும் சாதனத்தின் ஒருசில செயல்பாடுகளை கட்டுப்படுத்தவும் கூட செய்யலாம் மற்றும் உடனடி பழுதுநீக்கும் வழிகாட்டலை வழங்கலாம்.

எவ்வாறு ஹெச்ஆர்எம் ஆனது ஒரு ஏசி கூலிங் பிரச்சினைக்கு தீர்வு வழங்கியது

சென்னையில் கோடைக்காலமானது விரைவிலேயே தொடங்கி விட்டது மற்றும் வெப்பநிலை 35 டிகிரிக்கும் அதிகமாகிவிட்டது எனவே ரோஹன் லூத்ராவின் ஏர் கன்டிஷனர் ஆனது குறைந்த திறனுடன் கூலிங் செய்து கொண்டிருந்தது. அதிர்ஷ்டவசமாக ரோஹன் தனது ஸ்மார்ட்போனில் ஸ்மார்ட்திங்க்ஸ் செயலியை பதிவிறக்கம் செய்து வைத்திருந்ததாலும் ஏசி ஆனது செயலியில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்ததாலும் அவருக்கு பிழை பற்றிய ஒரு அறிவிப்பு வந்தது. உடனடியாக ரோஹன் ஸ்மார்ட்திங்சில் ஹோம் கேர் மூலம் சேவையை கோரினார் மற்றும் அவர் தொடர்பு மைய ஆலோசகருடன் இணைக்கப்பட்டார். ஆலோசனையின் பேரில் ஹெச்ஆர்எம்-ன் ரிமோட் டயக்னாஸ்டிக்ஸ் மூலம் பிரச்சினையை கண்டறிந்து ஏசி-ன் மைக்ரோஃபில்ட்டர் சுத்தம் செய்யப்பட வேண்டும் என்று கூறினார். பின்னர் அவர் ரோஹனுக்கு படிப்படியாக தொலைபேசி அழைப்பிலேயே வழிநடத்தி கிசி-ன் கூலிங் திறனை ஒருசில நிமிடங்களிலேயே வீட்டு வருகைக்கான தேவையில்லாமல் மீட்டெடுத்தார்.

இந்த மெய்-உலக உதாரணமானது எவ்வாறு ஹெச்ஆர்எம் கருவியானது வாடிக்கையாளர் ஆதரவை உருமாற்றி வருகிறது மற்றும் ஸ்மார்ட் சாதன பராமரிப்பை அதிக திறன் வாய்ந்ததாகவும் முன்கணிப்புமிக்கதாகவும் தொந்தரவற்றதாகவும் ஆக்குகிறது என்று கோடிட்டு காட்டுகிறது.

# ஐ.ஏ.எஸ். - ஐ.பி.எஸ். தேர்வு பயிற்சிக்கு அண்ணா நகரில் பயிற்சி மையம் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அறிவிப்பு




சென்னை 17, ஏப்ரல் 2025: தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து போட்டித் தேர்வுகளுக்காக தயாராகும் இளைஞர்களின் நலன் கருதி, கூடுதலாக சென்னை, அண்ணா நகரில் நவீன வசதிகளுடன் ஒரு அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம் தொடங்கப்படும் என்று அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தெரிவித்தார். சட்டசபையில் இன்று தாக்கல் செய்த மனித வள மேலாண்மைத் துறையில் இந்தப் புதிய அறிவிப்பை வெளியிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது: பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் புதிய நவீன சமையற்கூடம் அமைத்தல், ஏற்கனவேயுள்ள பல்நோக்கு சமுதாய கூட்டத்தினை உணவுக் கூடமாக மாற்றி அமைத்தல் மற்றும் தலைகீழ் சவ்வூடு பரவல் இயந்திரம் (ஆர்ஓ) அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இத்தேவைகளை நிறைவேற்றுவதற்கு ரூபாய் 3 கோடி மதிப்புள்ள திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

சென்னை, அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியின் கணினி ஆய்வகம் ரூபாய் 55 லட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திற்கென புதிய காணொலி பகிர்வு தளம் தொடங்கப்படும். பொதுப் பணிகளில் கருணை அடிப்படையிலான பணிநியமனங்களை இணைய தளம் மூலம் மேற்கொள்ளப்படும். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்துக்கு புதிய கணினிகள் செயல்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு இ-ஆபீஸ் திட்டத்தின் மூலம் தேவையான மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்படும். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் பிரிவு அலுவலகங்களுக்கு புதிய குரல் பதிவு செய்யும் கருவிகள் ரூ. 6.32 லட்சம் செலவில் வழங்கப்படும். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் புலன் விசாரணை அலுவலர்களுக்கு 144 மடிக்கணினிகள் ரூ.99 லட்சம் செலவில் வழங்கப்படும். ஊழல் தடுப்பு மற்றும் கையூட்டு தொடர்பாக பொது மக்கள் தடையின்றி கட்டணமில்லா தொலைபேசி மூலம் எளிதாக புகார் அளிக்க ஏதுவாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு உதவி மையம் முதல்வரின் முகவரி துறையின் கீழ் ரூ.53.75 லட்சம் செலவில் அமைக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் தெரிவித்தார்.

# மகாராஷ்டிராவின் கராட் நகரில் சுகாதாரக் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுவது உறுதி செய்யப்படுகிறது

சென்னை 17, ஏப்ரல் 2025: நாடு முழுவதும் சுகாதாரக் கழிவு மேலாண்மை ஒரு பெரிய சவாலாக உள்ளது.

இக்கழிவுகளை முறையாக அகற்றாமல் இருப்பது சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார சீர்கேடுகளுக்கு வழிவகுக்கிறது. இருப்பினும், மகாராஷ்டிராவின் சதாரா மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய நகரமான கராட், இந்த பிரச்சனையை எதிர்கொள்வதில் ஒரு முன்மாதிரியாக உருவெடுத்துள்ளது.

சுகாதார மற்றும் உயிரி மருத்துவக் கழிவுகளை 100% பிரித்தல், சேகரித்தல் மற்றும் செயல்முறை மூலம், கராட் பயனுள்ள மற்றும் நிலையான கழிவு மேலாண்மைக்கு ஒரு அளவுகோலை உருவாக்கித் தந்துள்ளது. சானிட்டரி நாப்கின்கள், டயப்பர்கள் மற்றும் பிற சுகாதாரப் பொருட்கள் போன்ற சுகாதார கழிவுகளை முறையாக அகற்றுவதை உறுதி செய்வது என்பது கராட் நகரில் சுகாதார அபாயங்கள், சுற்றுச்சூழல் தீங்கு மற்றும் சமூகக் களங்கம் ஆகியவற்றைத் தடுக்க உதவியுள்ளது.

கராட்டில், மருத்துவமனைகள், வீடுகள் மற்றும் பிற பகுதிகளிலிருந்து நாள்தோறும் சுமார் 300 முதல் 350 கிலோ சுகாதார கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன.

நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று, சுகாதாரக் கழிவுகள் குறித்து மக்களிடையே உள்ள மனத்தடைகளை அகற்றுவதாகும். முறையான சுகாதாரக் கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் மற்றும் முறையற்ற அகற்றலுடன் தொடர்புடைய சுகாதார அபாயங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்.

பொறுப்புணர்வுடன் கழிவுகளை வகை பிரித்தல் மற்றும் அகற்றலை ஊக்குவிப்பதில் முக்கியப் பங்கு வகித்த பயிலரங்குகள், சமூக மக்கள் தொடர்பு திட்டங்கள் மற்றும் பொது சேவை அறிவிப்புகள் போன்ற முயற்சிகள் மூலம் குடியிருப்பாளர்களுக்கு கழிவுப் பிரிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான புதுமையான உத்திகளை நகரம் பின்பற்றி வருகிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# மருத்துவ சேவையை அளிக்க திருப்பூரில் டாக் கேந்திராவை அறிமுகப்படுத்தும் ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ்

சென்னை 17, ஏப்ரல் 2025: இந்தியாவின் மிகப்பெரிய ரீடெயில் சுகாதார காப்பீட்டு நிறுவனமான ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைடு இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ்) நிறுவனமானது தமிழ்நாட்டின் திருப்பூரில் சுகாதார சேவையை திறம்பட மக்களை சென்று சேர்வதற்கான ஒரு முயற்சியாக டாக் கேந்திராவை தொடங்குவதை அறிவிப்பதில் பெருமை கொள்கிறது. இந்த அறிமுக விழாவில் திருப்பூர் மாவட்ட ஆட்சியரான திரு.டி. கிறிஸ்துராஜ், இ.ஆ.ப., மற்றும் திருப்பூர் மாநகராட்சி துணை மேயரான திரு. எம்.கே.எம்.ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர் பாலாஜி பாபு பேசுகையில், "எங்கள் டாக் கேந்திரா முயற்சியானது மருத்துவ சேவையை அனைவரும் அணுகக்கூடியதாக மாற்றுவதற்கான ஒரு படியாகும். எங்கள் நெட்வொர்கினைப் பயன்படுத்துவதன் மூலம், சுகாதார வசதிகளை நிறைவு செய்வதையும், மக்களுக்கு கூடுதல் மருத்துவ சேவையை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம். தேவைப்படும்போது சரியான பராமரிப்பை நோக்கி மக்களை வழிநடத்தப்படுவதை உறுதி செய்வதோடு, அவர்களின் சுகாதாரத் தேவைகளுக்கு வசதியான மற்றும் நம்பகமான முதல் கட்ட வழிகாட்டுதலை வழங்குவதையும் எங்கள் முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. சமூகத்தின் ஒரு பகுதியாக இருப்பது என்பது அதன் நல்வாழ்வுக்கு தீவிரமாக பங்களிப்பதாகும் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் இந்த முயற்சியின் மூலம், நாங்கள் சேவை செய்பவர்களின் வாழ்க்கையில் அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்த நாங்கள் பாடுபடுகிறோம்." என்றார்.

தொடக்க விழாவில் தலைமை விருந்தினர்களாகப் பங்கேற்ற திருப்பூர் மாவட்ட ஆட்சியர் திரு. டி. கிறிஸ்துராஜ், இ.ஆ.ப. மற்றும் திருப்பூர் நகர மாநகராட்சி துணை மேயர் திரு. எம்.கே.எம்.ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் குறிப்பிடுகையில், "ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸின் டாக் கேந்திரா முயற்சி நமது சமூகத்தில் மருத்துவ தேவைக்கான சவால்களை நிவர்த்தி செய்வதற்கான ஒரு புதுமையான அணுகுமுறையாகும். இந்தத் திட்டம் நமது சுகாதார உள்கட்டமைப்பில் உள்ள இடைவெளிகளைக் குறைக்கவும், நமது குடிமக்களுக்கு அடிப்படை மருத்துவ சேவைகளை வசதியாக அணுகவும் உதவும். நமது சுகாதார சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்கும், தரமான சுகாதாரம் நமது சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் சென்றடைவதை உறுதி செய்வதற்கும் இத்தகைய முயற்சிகள் அவசியம் என்று நான் நம்புகிறேன். தமிழகத்தில் திருப்பூர் மாநகராட்சி, இந்த முயற்சியை வரவேற்கிறது மற்றும் நமது குடியிருப்பாளர்களின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வில் அதன் நேர்மறையான தாக்கத்தை எதிர்நோக்குகிறது." என்றார்கள்.

டாக் கேந்திரா முயற்சியின் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டின் திருப்பூரில் உள்ள ஸ்டார் ஹெல்த் கிளைகள் ஆனது திங்கள் முதல் சனிக்கிழமை வரை கிளை வேலை நேரங்களில் ஒரு மருத்துவர் மற்றும் பயிற்சி பெற்ற துணை மருத்துவரால் நிர்வகிக்கப்படும் ஒரு ஆலோசனைப் பகுதியுடன் கூடிய பிரத்யேக மருத்துவமனையாக செயல்படும். இந்த கிளினிக் ஆனது முதன்மை பராமரிப்பு சேவைகளை வழங்கும் மற்றும் ஆலோசனை மற்றும் நோயறிதலுக்காக ஒரு பொது மருத்துவரை அணுகும் வசதியை வழங்கும். துணை மருத்துவர் அடிப்படை சுகாதார குறிகாட்டிகளைச் சரிபார்த்து, துல்லியமான ஆலோசனை மற்றும் பராமரிப்பை வழங்குவதில் மருத்துவருக்கு ஆதரவளிப்பார். தேவைப்படும்போது மேம்பட்ட பராமரிப்புக்காக டெலிமெடிசின் மூலமாகவும் சிறப்பு மருத்துவர்கள் இருப்பார்கள். இந்த வசதி உள்ளூர் சமூகத்திற்கு இலவசமாகவோ அல்லது பெயரளவு கட்டணத்திலோ வழங்கப்படும்.

ஆரோக்கியமான சமூகங்களை ஆதரிப்பதற்கான ஸ்டார் ஹெல்த் பயணத்தில் டாக் கேந்திரா முயற்சி ஒரு முக்கியமான மைல்கல். அடிப்படை மருத்துவ சேவைகளை மக்களுக்கு வழங்குவதன் மூலம், அவர்களின் உடல்நலக் கவலைகளை நிவர்த்தி செய்வதற்கும், தேவைப்படும்போது கூடுதல் பராமரிப்புக்கான வழிகாட்டுதலைக் கண்டறிவதற்கும் இது ஒரு நம்பகமான இடத்தை வழங்குகிறது. இந்த முயற்சி ஒரு பாலமாகச் செயல்படுகிறது, மக்களைத் தேவையான பராமரிப்புடன் இணைக்கிறது மற்றும் ஆதரவு மற்றும் கவனிப்புடன் அவர்களின் சுகாதாரப் பயணங்கள் மூலம் அவர்களை வழிநடத்துகிறது. வெறும் ஒரு முன்முயற்சியை விட, டாக் கேந்திரா, அது சேவை செய்யும் மக்களின் வாழ்க்கையில் அங்கமாவது, ஈடுபாடு மற்றும் ஆதரவாக இருப்பது ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றிய ஸ்டார் ஹெல்த்தின் புரிதலை பிரதிபலிக்கிறது.

# இண்டஸ் டவர்ஸின் ஸ்மார்ட் வகுப்பறைகள் இந்திய நிலப்பரப்பின் தெற்கு முனையை அடைகின்றன



கன்னியாகுமரி 17, ஏப்ரல் 2025: இந்தியாவின் தெற்கு முனையான கன்னியாகுமரியில் டிஜிட்டல் கல்வியை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில், உலகின் மிகப்பெரிய தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பு நிறுவனங்களில் ஒன்றான இண்டஸ் டவர்ஸ் லிமிடெட், இந்தப் பகுதியில் உள்ள 5 அரசுப் பள்ளிகளில் அதன் ஸ்மார்ட் வகுப்பறை திட்டத்தைத் தொடங்கியது. மாவட்டக் கல்வி அதிகாரி திருமதி ஆர்.இ. கிறிஸ்டல் ஜாய்லெட், தொழில்துறையைச் சேர்ந்த பிரமுகர்கள் முன்னிலையில், பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறை வசதியை திறந்து வைத்தார்.

இண்டஸ் டவர்ஸின் முதன்மையான சிஎஸ்ஆர் திட்டமான "சக்ஷம்" இன் ஒரு பகுதியாக, ஸ்மார்ட் வகுப்பறைகள் கணினி, எல்இடி ஸ்மார்ட் டிவி, பிரிண்டர் மற்றும் நம்பகமான மின்னாப்புப்பிரதி ஆகியவற்றைக் கொண்டுள்ளன - ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு டிஜிட்டல் கற்றல் கருவிகள் மற்றும் வளங்களுக்கான தடையற்ற அணுகலை உறுதி செய்கின்றன. வகுப்பறை கற்பித்தலை மேம்படுத்துவதற்கு நேரடி பயிற்சி மற்றும் டிஜிட்டல் கருவிகள் மூலம் கல்வியாளர்களை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அரசுப் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் நவீன கற்றல் வளங்களை சமமாக அணுகுவதையும் உறுதி செய்வதன் மூலம் இந்த முயற்சி டிஜிட்டல் பிளவைக் குறைக்கிறது. இந்திய அரசின் 'டிஜிட்டல் இந்தியா' நோக்கத்திற்கு பங்களிக்கும் இண்டஸ் டவர்ஸின் ஷ்மார்ட் வகுப்பறை திட்டம், 217 மாணவர்களிடையே டிஜிட்டல் கல்வியறிவை அதிகரிப்பதையும், கன்னியாகுமரியில் உள்ள 23 க்கும் மேற்பட்ட ஆசிரியர்களை வகுப்பறை கற்பித்தலில் டிஜிட்டல் கருவிகளை திறம்பட ஒருங்கிணைக்கும் திறன்களுடன் சித்தப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொடக்க நிகழ்வில் பேசிய மாவட்ட கல்வி அதிகாரி திருமதி ஆர்.இ. கிறிஸ்டல் ஜாய்லெட், "இண்டஸ் டவர்ஸின் ஸ்மார்ட் வகுப்பறை முயற்சி, கல்வியில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில், மேலும் உள்ளடக்கிய, ஈடுபாட்டுடன் கூடிய மற்றும் எதிர்காலம் சார்ந்த கற்றல் சூழலை உருவாக்க உள்ளது. இந்த முயற்சி கன்னியாகுமரியை டிஜிட்டல் முறையில் அதிகாரம் பெற்ற மாவட்டமாக மாற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கும், இது வரும் ஆண்டுகளில் அறிவு மற்றும் புதுமைகளில் முன்னணியில் இருக்கத் தகுதியுடையதாக இருக்கும்" என்றார்.

"மாணவர்களுக்கான டிஜிட்டல் கற்றலுக்கான எங்கள் உறுதியான அர்ப்பணிப்பை இந்த முயற்சி வெளிப்படுத்துகிறது" என்று இண்டஸ் டவர்ஸின் தமிழ்நாடு மற்றும் கேரளாவின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. நிசார் முகமது கூறினார். இண்டஸ் டவர்ஸின் ஸ்மார்ட் வகுப்பறை திட்டம் பாரம்பரிய வகுப்பறைகளை மாற்றுவது மட்டுமல்லாமல், கன்னியாகுமரி முழுவதும் நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு பிரகாசமான, நம்பிக்கைக்குரிய எதிர்காலத்திற்கான கதவைத் திறக்கிறது.

நாடு முழுவதும் உள்ள சமூகங்களைச் சென்றடையும் இண்டஸ் டவர்ஸ், 22 மாநிலங்களில் ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவி, ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து, 50,000 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு டிஜிட்டல் கல்வியை மேம்படுத்தியுள்ளது. இந்த சிஎஸ்ஆர் திட்டத்தை என்ஐஐடி அறக்கட்டளை செயல்படுத்துகிறது.

# இந்தியாவின் மீன் உற்பத்தி 184 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது: மத்திய இணையமைச்சர் ஜார்ஜ் குரியன்



சென்னை 17, ஏப்ரல் 2025: கடந்த 10 ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆட்சியில் இந்தியாவின் மீன் உற்பத்தி 95 லட்சம் டன்னிலிருந்து 184 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது என்று மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளத்துறை இணையமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் தெரிவித்துள்ளார். புதுச்சேரியில் பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களை அவர் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் புதுச்சேரியில் 2,300 மீன்பிடி படகுகளில் டிரான்ஸ்பாண்டர்கள் நிறுவப்படும் என்று திரு ஜார்ஜ் குரியன் அறிவித்தார். இவை மீனவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ளவும், அவசர மருத்துவ உதவியைப் பெறவும், சர்வதேச கடல் எல்லைகளை நெருங்கும்போது எச்சரிக்கைகளைப் பெறவும், கடலில் மீன்கள் கிடைப்பது குறித்த உடனடித் தகவல்களைப் பெறவும் உதவும் என்று அவர் கூறினார்.

நீலப் புரட்சியின் கீழ் ரூ. 3000 கோடி மீன்வள உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்துக்கு ரூ. 7,500 கோடி, பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்துக்கு ரூ. 20,050 கோடி, பிரதமரின் மீன் உற்பத்தியாளர் வளர்ச்சி திட்டத்துக்கு ரூ. 6,000 கோடி என பல்வேறு மீன்வளத் துறை திட்டங்களுக்கு மத்திய அரசு கணிசமாக நிதி ஒதுக்கியிருப்பதையும் அமைச்சர் எடுத்துரைத்தார். மீனவர்களுக்கான கிசான் கடன் அட்டைத் திட்டத்தின் கீழ் மீனவர்கள் ரூ. 5 லட்சம் வரை கடன் பெறலாம் என திரு ஜார்ஜ் குரியன் குறிப்பிட்டார்.

விழாவிற்கு தலைமை வகித்த புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கே.கைலாஷ்நாதன், இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள திட்டங்கள் புதுச்சேரியில் உள்ள மீனவ சமுதாயத்தினரின் வாழ்வாதாரத்தை கணிசமாக மேம்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் புதுச்சேரி முதலமைச்சர் திரு என்.ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம், அமைச்சர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் சிட்பியுடன் இணைந்து எம்.எஸ்.எம்.இ தொழில் துறைக்கான காப்பீடுத் திட்டங்களை வழங்க உள்ளது



சென்னை 17, ஏப்ரல் 2025: இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

"மத்திய அரசு நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம், குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப தனிப்பயனாக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டங்களை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது" என்று அந்த காப்பீட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு மேத்யூ ஜார்ஜ் தெரிவித்துள்ளார்.

"யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம், தொழில் துறை சார்ந்த வங்கியான சிட்பியுடன் இணைந்து குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான நிதிசார் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இது வரும் நாட்களில் மத்திய அரசின் முன்னுரிமை அடிப்படையில் நாடு முழுவதற்கும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

குறு. சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் பிரத்யேக காப்பீட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதில் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் ஆர்வத்துடன் உள்ளது என்று அதன் பொது மேலாளர் திரு எச்.ஆர். கங்குவால் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் நாட்டின் இரண்டாவது பெரிய பொதுத்துறை காப்பீட்டு நிறுவனமாக உள்ளது.

இந்த நிறுவனம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மேம்பாடு, நிதி, வளர்ச்சிக்கான ஒரே முதன்மை நிதி நிறுவனமான மத்திய அரசின் சிறு தொழில் மேம்பாட்டு வங்கியுடன் இணைந்து வாடிக்கையாளர்களுக்கு பொது காப்பீட்டுத் திட்டங்களை வழங்க முடிவு செய்துள்ளன.

இது மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களைச் சார்ந்த வளர்ச்சித் திட்டங களுக்கான ஒரு முக்கிய முகமையாகும்.

சிறு தொழில் மேம்பாட்டு வங்கியான சிட்பி நாடு முழுவதும் 123 கிளைகளைக் கொண்டுள்ளது.

அதே நேரத்தில் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் பொதுத்துறைக் காப்பீட்டு நிறுவனமாக 88 ஆண்டுகளுக்கும் மேலான சிறப்பான காப்பீட்டுத் திட்டங்களை செயல் படுத்தி வருகிறது.

இது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களின் காப்பீடு உள்ளிட்ட பல்வேறு நிதிசார் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் விரைந்து செயல்பட முடிவு செய்துள்ளன.

வீட்டுவசதி, சுகாதாரம், வாகனங்கள், பொறியியல் போன்ற தனிப்பட்ட, வர்த்தகம் சார்ந்த நடவடிக்கைகளில் பொதுவான காப்பீட்டுத் தீர்வுகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# சென்னையில் நீரிழிவு நோயின் பரவல்: ஆய்வு தரவுகளை வெளியிட்ட காவேரி மருத்துவமனை




சென்னை 17, ஏப்ரல் 2025: தமிழ்நாட்டில் பல்வேறு சிறப்பு பிரிவுகளுடன் இயங்கி வரும் உடல்நல பராமரிப்பு சங்கிலித் தொடர் நிறுவனமான காவேரி மருத்துவ மனைகள் குழுமத்தின் ஒரு அங்கமான, காவேரி மருத்துவமனை ஆழ்வார்பேட்டை சென்னையில் உள்ள மக்களிடையே நீரிழிவு குறித்து நடத்தப்பட்ட ஒரு விரிவான ஆய்வின் முக்கிய கண்டறிதல் முடிவுகளை வெளியிட்டுள்ளது. நீரிழிவு நோய் குறித்த மேம்பட்ட விழிப்புணர்வு மற்றும் முன்தடுப்பு உத்திகளின் அவசரத் தேவையை இந்த ஆய்வின் முடிவுகள் வலுவாகச் சுட்டிக்காட்டுகின்றன.

சமுதாய சுகாதாரத்திற்கான தனது அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக, இம்மருத்துவமனை 2024 இல் “டயாபடிஸ் ஆன் வீல்ஸ்” (நடமாடும் நீரிழிவு சிகிச்சை வாகனம்) என்ற திட்டத்தை தொடங்கியிருந்தது. இது ஒரு குறுக்குவெட்டு பரிசோதனை ஆய்வாகும். 100 நாட்களுக்கும் மேலாக சென்னை முழுவதும் இலவச நீரிழிவு நோய் பரிசோதனை முகாம்களை இத்திட்டத்தின் மருத்துவ பணியாளர்களது குழு நடத்தி ஆய்வை மேற்கொண்டது. இத்திட்டத்தின் கீழ் நகரின் பல்வேறு இடங்களில் 3,971 நபர்களுக்கு நீரிழிவிற்கான தொடக்கநிலை ஸ்கிரீனிங் சோதனை செய்யப்பட்டது. இந்த முயற்சியானது ஆரம்ப நிலையிலேயே நீரிழிவைக் கண்டறிவதில் உள்ள முக்கியமான இடைவெளிகளை வெளிப்படுத்தியது மற்றும் வகை 2 நீரிழிவு நோய் (தி2டிஎம்) அதிகரித்து வருவதற்கான குறிப்பிடத்தக்க ஆபத்து காரணிகளை (உடல் பருமன், உணவுப் பழக்கங்கள்) அடையாளம் காட்டியது.

ஆய்வின் முக்கிய கண்டறிதல் முடிவுகளுள் கீழ்கண்டவை உள்ளடங்கும்:

 வகை 2 நீரிழிவு நோய் குறித்த முந்தைய வரலாறு இல்லாத நபர்களில் 21% பேர் தங்கள் இரத்த சர்க்கரை அளவுகளில் உள்ள அசாதாரண நிலையை (டிஸ்கிளைசீமியா) அறியவில்லை. சிறிழிவு தொடர்பாக ஆரம்பகால நோயறிதல் மற்றும் அதன் மீதான விழிப்புணர்வில் உள்ள குறிப்பிடத்தக்க இடைவெளியை இது சுட்டிக்காட்டுகிறது.

 கர்ப்ப கால நீரிழிவு நோய் (ஜிடிஎம்) (கர்ப்ப காலத்தில் அதிக இரத்த சர்க்கரை அளவு) இருந்த பெண்களில் 55.1% பேருக்கு வகை 2 நீரிழிவு நோய் பிறகு உருவாகியிருக்கிறது. ஞார்ப்ப காலத்திற்குப் பிந்தைய நீரிழிவு நோய் பரிசோதனை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை இத்தரவு எடுத்துக்காட்டுகிறது.

 வகை 2 நீரிழிவு நோய் வரலாறு உள்ள நபர்களிடையே (67.6%) உடல் பருமன் குறிப்பிடத்தக்க அளவு அதிகமாக இருந்தது; தங்கள் இரத்த சர்க்கரை அளவுகளில் உள்ள அசாதாரண நிலையை அறியாத நபர்களிடையே (64.7%) உடல் பருமன் கணிசமாக அதிகமாக இருந்தது. இது, உடல் பருமனுக்கும் நீரிழிவு நோய்க்கும் இடையே உள்ள வலுவான தொடர்பை உறுதிப்படுத்துகிறது.

 தங்கள் இரத்த சர்க்கரை அளவுகளில் உள்ள அசாதாரண நிலையை அறியாத நபர்களிடையே மாவுச்சத்து அதிகம் உள்ள உணவுகளை (கார்போஹைட்ரேட்) உட்கொள்ளல் குறிப்பிடத்தக்க

வகையில் அதிகமாக இருந்தது (88.5%). இது கண்டறியப்படாத இரத்த சர்க்கரை ஒழுங்கின்மைகளில் உணவுப் பழக்கம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை இந்த தரவு காட்டுகிறது.

காவேரி மருத்துவ மனையின் மூத்த நீரிழிவு நோய் நிபுணர் டாக்டர் பரணீதரன் கே, இந்த ஆய்வின் நோக்கம் மற்றும் முக்கியத் துவத்தை வலியுறுத்தி கூறியதாவது: “இந்த ஆய்வின் கண்டறிதல் முடிவுகள் நீரிழிவு நோயை திறம்பட எதிர்த்துப் போராடுவதற்கு தன்முனைப்புடன் கூடிய பரிசோதனைத் திட்டங்கள், வாழ்க்கை முறை மாற்றங்கள் மற்றும் பொது சுகாதார முன்னெடுப்புகளின் அவசரத் தேவையை வலியுறுத்துகின்றன. மேலும், சுகாதார பராமரிப்பு கொள்கைகளும், அரசாங்கத்தின் முயற்சிகளும் நீரிழிவு நோய் வராமல் தடுப்பதிலும் மற்றும் அதன் மேலாண்மைக்கும் மிகவும் ஆதரவான சூழலை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்க முடியும். இதன் மூலம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு ஆதார வளங்களும், சுகாதார திட்டங்களும் சென்றடைவதை உறுதிப்படுத்த முடியும். தினமும் 45 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வதன் மூலமும், உடல் பருமனைத் தடுக்க கவனத்துடன் சமச்சீரான உணவை உட்கொள்வதன் மூலமும், மன நலனை அக்கறையுடன் பேணுவதன் வழியாகவும் கவனிப்பதன் மூலமும் பொதுமக்கள் தங்கள் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிக்கத் தொடங்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய்கள் போன்ற தொற்றா நோய்களைக் கண்டறிய குறிப்பிட்ட கால அளவுகளில் செய்யப்படும் வழக்கமான பரிசோதனைகளும் பெரிதும் உதவும்.”

“உலகளவில் நீரிழிவு நோயின் பரவல் அதிகரித்து வருகிறது; இதற்கு பல காரணிகள் பங்களிப்பை செய்கின்றன. பொறுப்புணர்வுடன் செயல்படும் சுகாதாரச் சேவை வழங்குநர்களாக, சிகிச்சையளிப்பதில் மட்டுமல்ல, நோய் வராமல் தடுப்பதிலும் நாங்கள் சிறப்பு கவனம் செலுத்துகிறோம். சமூக மக்கள் மத்தியில் குறிப்பிட்ட கால அளவுகளில் நடத்தப்படும் பரிசோதனைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம், இப்பகுதியில் நீரிழிவு நோயின் சுமையை குறைப்பது எமது குறிக்கோளாகவும், இலக்காகவும் இருக்கிறது. இந்த சிறப்பான ஆய்வு முயற்சியை மேற்கொண்ட டாக்டர் பரணீதரன் மற்றும் குழுவினரை நான் மனமாரப் பாராட்டுகிறேன், இது மக்களிடையே ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்,” என்று காவேரி மருத்துவ மனைகள் குழுமத்தின் இணை நிறுவனரும், நிர்வாக இயக்குனருமான டாக்டர் அரவிந்தன் செல்வராஜ் கூறினார்.

# இந்திய சாலைகள் அமெரிக்காவை விட அடுத்த 2 ஆண்டுகளில் சிறப்பாக இருக்கும்: மத்திய அமைச்சர் நிதின் கட்காரி உறுதி

சென்னை 17, ஏப்ரல் 2025: 2 ஆண்டுகளில் இந்திய சாலை உள்கட்டமைப்பு அமெரிக்காவை விட சிறப்பானதாக இருக்கும் என்று மத்திய மந்திரி நிதின் கட்காரி கூறினார்.

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை மந்திரி நிதின் கட்காரி மும்பை தாதரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

இந்திய சாலைகளின் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு வருகிறது. அடுத்த 2 ஆண்டுகளில் இந்திய சாலைகளின் உள்கட்டமைப்பு அமெரிக்காவை விட சிறப்பானதாக இருக்கும்.

நாடு முழுவதும் மனிதர்களால் நேரடியாக கட்டணம் வசூல் செய்யப்படும் சுங்கச்சாவடிகள் விரைவில் மூடப்படும். மத்திய அரசு விரைவில் புதிய சுங்க கட்டண கொள்கையை அறிமுகப்படுத்தும். தற்போது இதுபற்றி நான் அதிகம் பேச மாட்டேன். புதிய கொள்கை அறிவிக்கப்பட்டு, அமல்படுத்தப்பட்டால், சுங்க கட்டணம் பற்றி யாரும் புகார் செய்ய எந்த காரணமும் இருக்காது.

டெல்லி-ஜெய்பூர், மும்பை-கோவா நெடுஞ்சாலை பணிகள் என் பதவி காலத்தில் ஏற்பட்ட கரும்புள்ளிகள். டெல்லி-மும்பை நெடுஞ்சாலை சூரத் வழியாக போடப்படுகிறது. இதேபோல சூரத்-சென்னை இடையே புதிய நெடுஞ்சாலை அமைக்கப்பட உள்ளது.

இதேபோல சூரத்தில் இருந்து நேரடியாக மராட்டியத்தின் நாசிக், அகமதுநகர், சோலாப்பூர் மற்றும் தென்பகுதிகளுக்கு செல்ல முடியும். சூரத்தில் இருந்து தென்பகுதிக்கு செல்ல ஒருவர் மும்பை, புனே வரவேண்டிய அவசியம் இருக்காது. மும்பை-கோவா நெடுஞ்சாலை பணிகளில் பல்வேறு சிக்கல்கள் இருந்தன.

நிலப்பிரச்சினை தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருந்தது. எனவே சாலைக்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்துக்கு இழப்பீடு வழங்குவதில் முடிவில்லாமல் பிரச்சினைகள் இருந்தன. எனினும் நீங்கள் கவலைப்பட வேண்டாம். இந்த சாலை பணி வருகிற ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

இது கொங்கன் பகுதி மக்களுக்கு வரபிரசாதமாக அமையும். இவ்வாறு அவர் பேசினார்.

# ஒடிசா மாநிலம் மயூர்பஞ்ச், பரிபடாவில் “பிரதமரின் விஸ்வகர்மா-தேசிய ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியின மையம்”குறித்த மாநாடு

சென்னை 17, ஏப்ரல் 2025: மத்திய அரசின் குறு, சிறு, நடுத்தர தொழில்துறை அமைச்சகம், ஒடிசா மாநிலம் மயூர்பஞ்ச், பாரிபடாவில் உள்ள மகாராஜா ஸ்ரீராம் சந்திர பஞ்சா தியோ பல்கலைக்கழகத்தின் மாநாட்டு மண்டபத்தில் 2025 ஏப்ரல் 16-ம் தேதி 'பிரதமரின் விஸ்வகர்மா - தேசிய ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியின மையம்' குறித்த மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கண்காட்சி ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த மாநாட்டில் பிரதமரின் விஸ்கர்மா திட்டத்தின் பயனாளிகள் மற்றும் அரசு அதிகாரிகளை ஒன்றிணைத்து தேசிய ஷெட்யூல்டு, பழங்குடியின மையம் மேற்கொள்ளும் பல்வேறு முயற்சிகளை முன்னிலைப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த மாநாட்டை மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சர் திரு ஜிதன் ராம் மஞ்சி, ஒடிசா மாநில முதல்வர் திரு மோகன் சரண் மாஜி ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர்.

# இந்து சமய அறநிலையத்துறை மறுபதிப்பு செய்த 300 ஆன்மிக நூல்கள்: முதலமைச்சர் ஸ்டாலின் வெளியிட்டார்



சென்னை 17, ஏப்ரல் 2025: இந்து சமய அறநிலையத்துறை மறுபதிப்பு செய்த அரிய 300 ஆன்மிக நூல்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் நேற்று வெளியிட்டார்.

இந்து சமய அறநிலையத்துறை சமய நெறிகளை பரப்பும் வகையில் அரிய ஆன்மிக நூல்களை மறுபதிப்பு செய்து புதுப்பொலிவுடன் நூலாக்கம் செய்யும் பணிகளையும், அவை அனைவருக்கும் கிடைக்கும் வகையில் கோவில்களில் புத்தக விற்பனை நிலையங்களையும் அமைத்து செயலாற்றி வருகிறது. அந்த வகையில், சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை கமிஷனர் அலுவலகத்தில் பதிப்பகப் பிரிவு தொடங்கப்பட்டு உள்ளது.

முதல்கட்டமாக தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருப்பாவை, திருவெம்பாவை, அபிராமி அந்தாதி, நாலாயிர திவ்யபிரபந்தம், தமிழகக் கலைகள், சைவமும் தமிழும், இந்திய கட்டிடக் கலை வரலாறு, அவ்வையார் வரலாறு, பதினெண் புராணங்கள் உள்ளிட்ட அரிய 108 ஆன்மிக நூல்களை கடந்த 2023-ம் ஆண்டு ஜனவரி 19-ந் தேதி முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

தொடர்ந்து, 2-ம் கட்டமாக தல வரலாறு, தலப்புராணங்கள், நாட்டுடைமையாக்கப்பட்ட பக்தி இலக்கியங்கள் புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 108 ஆன்மிக நூல்கள் கடந்த ஆண்டு பிப்ரவரி 27-ந் தேதி வெளியிடப்பட்டன. இந்நூல்கள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் கமிஷனர் அலுவலகம் மற்றும் 203 கோவில்களில் புத்தக விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

2024-2025-ம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டசபை மானியக் கோரிக்கையில், ‘இந்து சமய அறநிலையத்துறை சார்பாக நடத்தப்படும் பதிப்பகப் பிரிவின் மூலம் சமயம் சார்ந்த பழமையான மற்றும் அரிய 300 ஆன்மிக நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்படும்' என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பை நிறைவேற்றும் வகையில் பதிப்பகப் பிரிவின் மூலம் 3-ம் கட்டமாக, திருப்பேரூர் புராணம், பாவநாசத் தலபுராணம் போன்ற தலபுராண நூல்கள், சிவ புராணம், கந்தபுராணம் போன்ற புராணக்கதை நூல்கள், வழிபாட்டு பாடல்கள், மகாபாரதம், கம்பராமாயணம் போன்ற இதிகாச நூல்கள், காரைக்கால் அம்மையார். நம்மாழ்வார் போன்ற அடியார் புலவர் வரலாற்று நூல்கள், நுண்கலைகள், ஓவியச் செந்நூல் போன்ற கோவில் கலை வரலாற்று நூல்கள், சைவ, வைணவ இலக்கியங்கள், வேலும் வில்லும், வள்ளி மணம் போன்ற ஆன்மிக ஆய்வு நூல்கள், ‘டெம்பிள்ஸ் கிப்டேடு வித் தேவாரம்’ மற்றும் ‘ஹவ் சோல் பிகேம்ஸ் லைட்’ போன்ற ஆங்கில நூல்கள் என புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 300 ஆன்மிக நூல்களை, சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை கமிஷனர் பி.என்.ஸ்ரீதர், இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக்குழு உறுப்பினர் சுகி சிவம், கூடுதல் கமிஷனர்கள் டாக்டர் சி.பழனி, சி.ஹரிப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 2023-24 நிதியாண்டோடு ஒப்பிடுகையில் கடந்த நிதியாண்டில் (2024-25) ஒட்டுமொத்த ஏற்றுமதி 5.50 சதவீதம் உயர்வு

சென்னை 17, ஏப்ரல் 2025: கடந்த நிதியாண்டில் (2024-25) ஏப்ரல்-மார்ச்) நாட்டின் ஏற்றுமதி, முந்தைய நிதியாண்டுடன் (2023-24) ஒப்பிடுகையில் 5.50 சதவீதம் அதிகரித்துள்ளது.

2023-24 நிதியாண்டில் பொருட்கள், சேவைகள் என இரண்டின் ஏற்றுமதியும் 778.13 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. கடந்த நிதியாண்டில் (2024-25) ஒட்டுமொத்த ஏற்றுமதி 5.50 சதவீதம் அதிகரித்து 820.93 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

2024-25-ம் நிதியாண்டில் காபி, மின்னணுப் பொருட்கள், அரிசி, இறைச்சி, பால், தேயிலை, ஜவுளி, மருந்துகள், கனிமங்கள், பொறியியல் பொருட்கள், பழங்கள், காய்கறிகள் போன்றவற்றின் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துக் காணப் பட்டது.

2023-24-ம் நிதியாண்டில் காபி ஏற்றுமதி 1.29 பில்லியன் அமெரிக்க டாலரில் இருந்து 2024-25-ம் நிதியாண்டில் 1.81 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது. இது 40.37 சதவீதம் அதிகமாகும். மின்னணு பொருட்கள் ஏற்றுமதி 2023-24-ம் நிதி யாண்டில் 29.12 பில்லியன் அமெரிக்க டாலரில் இருந்து 2024-25-ம் நிதியாண்டில் 38.58 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்து 32.47% உயர்ந்துள்ளது. அரிசி ஏற்றுமதி 2023-24-ம் நிதியாண்டில் 10.42 பில்லியன் அமெரிக்க டாலரில் இருந்து 2024-25-ம் நிதியாண்டில் 19.73% அதிகரித்து 12.47 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளது.

இறைச்சி, பால் பொருட்கள் மற்றும் கோழிப்பண்ணை பொருட்கள் ஏற்றுமதி 2023-24-ம் நிதியாண்டில் 4.53 பில்லியன் அமெரிக்க டாலரில் இருந்து 2024-25-ம் நிதியாண்டில் 5.1 பில்லியன் அமெரிக்க டாலராக 12.57% அதிகரித்துள்ளது.

தேயிலை ஏற்றுமதி 2023-24-ம் நிதியாண்டில் 0.83 பில்லியன் அமெரிக்க டாலர்களிலிருந்து 2024-25-ம் நிதி யாண்டில் 0.92 பில்லியன் அமெரிக்க டாலராக 11.84% அதிகரித்துள்ளது. அனைத்து ஜவுளி களின் ஆயத்த ஆடை ஏற்றுமதி 2023-24-ம் நிதியாண்டில் 14.53 பில்லியன் அமெரிக்க டாலரில் இருந்து 2024-25-ம் நிதியாண்டில் 15.99 பில்லியன் அமெரிக்க டாலராக 10.03% அதிகரித் துள்ளது. மருந்துகள் ஏற்றுமதி 2023-24-ம் நிதியாண்டில் 27.85 பில்லியன் அமெரிக்க டாலரில் இருந்து 2024-25-ம் நிதியாண்டில் 30.47 பில்லியன் அமெரிக்க டாலராக 9.39% அதிகரித்துள்ளது.

பொறியியல் பொருட்கள் ஏற்றுமதி 2023-24-ம் நிதியாண்டில் 109.3 பில்லியன் அமெரிக்க டாலரில் இருந்து 2024-25-ம் நிதியாண்டில் 116.67 பில்லியன் அமெரிக்க டாலராக 6.74% அதிகரித்தது. யூழங்கள், காய் கறிகள் ஏற்றுமதி 2023-24-ம் நிதியாண்டில் 3.66 பில்லியன் அமெரிக்க டாலரில் இருந்து 2024-25-ம் நிதியாண்டில் 3.87 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்து 5.67% உயர்ந்துள்ளது.

2025 மார்ச் மாதத்தைப் பொறுத்த வரை மொத்த ஏற்றுமதி 73.61 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது மார்ச் 2024 உடன் ஒப்பிடும்போது 2.65 சதவீத வளர்ச்சியாகும்.